தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
இலக்கம் : 287, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
புதன்கிழமை 02 மார்ச் 2022 Wednesday 02nd March 2022

இலங்கையர்கள் பொருளாதாரம் பற்றி குறிப்பிட்ட வட்டத்திற்கு வெளியே சிந்திக்கத் தயாராக இருக்கிறார்களா?

பொருளாதார நெருக்கடி குறித்து மீள் பரிசீலனை

கொரோனா வைரஸ் இன்னும் எம்மை விட்டு விலகிச் சென்றுவிடவில்லை

இலங்கையில் 9 மில்லட்சத்திற்கும் அதிகமான மக்கள் கொரோனா வைரஸ் தடுப்பூசியின் ஒரு டோசைக் கூட பெற்றுக்கொள்ள வில்லையென்பது அறியவந்துள்ளது. மொத்த சனத்தொகையில் 95.5 சதவீதமானோர் முதல் டோசைப் பெற்றுள்ள அதேவேளை, 79.8 சதவீதமானோர் இரண்டாவது டோசை பெற்றுக்கொண்டுள்ளனர். பூஸ்டர் டோசை பொறுத்தவரை 20 வயதுக்கு மேற்பட்ட 14.5 மில்லியன் பேர் அதனைப் பெற தகுதியுடையவர்களாவர். ஆயினும் 6.6 மில்லியன் பேர் மட்டுமே பூஸ்டர் டோசைப் பெற்றுள்ளனர். இது 44 சதவீதமாகும் என்று தொற்றுநோய் பிரிவு பணிப்பாளர் டாக்டர் சமித்த கினிகே கூறியிருப்பதை அவதானிக்க முடிகிறது. கொரோனா வைரஸின் அபாயம் இன்னும் நீங்கிவிடாத போதிலும் அதனை மக்கள் மிகவும் இலகுவாக எடுத்துக்கொள்கிறார்கள் போன்றே தோன்றுகிறது. அதனாலேயே பூஸ்டர் டோசை எடுத்துக்கொள்வதற்கு ஆட்கள் தயங்குவதாக டாக்டர் கூறியுள்ளார். நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுநோய் மரணங்களின் எண்ணிக்கை 16 ஆயிரத்தை கடந்திருப்பதுடன், கடந்த ஒரு வாரத்தில் நாட்டில் 200க்கும் அதிகமானோர் இறந்துள்ளனர். 60 வயதுக்கு மேற்பட்ட சுமார் 11 மில்லட்சம் பேர் இன்னும் பூஸ்டர் டோசை பெறவில்லையெனவும் பெரும்பாலும் அவர்களே சிக்கலை எதிர்கொள்வதாகவும் கொவிட்-19 தொற்றுக்கு இலக்காகிறார்கள் என்றும் கராந்தர்ப் பிரிவினர் கட்டிக்காட்டுவதுடன், இது இறுதியில் கொரோனா மரணங்கள் முன்னாிலும் பார்க்க அதிகரிக்க வழிவகுக்குமெனவும் எச்சரிக்கப்படுகிறது.

மனித வரலாற்றில், தொற்றுநோய்கள் 30 கோடியிலிருந்து 50 கோடி மக்களைக் கொன்றுள்ளன. மருத்துவத்தில் நவீன முன்னேற்றங்கள் இருந்தபோதிலும், கொரோனா வைரஸ் நோய் கடந்த இரு வருடத்திற்குள் 59 மில்லட்சத்துக்கும் அதிகமான மரணங்களை ஏற்படுத்தியுள்ளது. இறப்பு எண்ணிக்கையைத் தவிர, தொற்றுநோய் உலகம் முழுவதும் குறிப்பிடத்தக்க அளவுக்கு உள, உடல், பொருளாதார ரீதியான சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது.கொரோனா ஏற்கனவே பல்வேறு உள நலம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு வழிவகுத்துள்ளது. இதில் பதற்றம், மனச்சோர்வு, மன அழுத்தம்,அதிர்ச்சி தொடர்பான கோளாறுகள் போன்றவையும் அடங்கும்.இந்த தொற்றுநோய் சிறுவர்கள் மற்றும் இளம் பருவத்தினர் உட்பட அனைவருக்கும் உளநல விளைவுகளை ஏற்படுத்திய சிக்கலான சவால்களையும் கொண்டு வந்துள்ளது . துக்கம், பயம், நிச்சயமற்ற தன்மை, சமூக தனிமைப்படுத்தல், அதிக நேரத்தை திரையில் செலவிடுதல் மற்றும் பெற்றோரின் சோர்வு ஆகியவை குழந்தைகளின் மன ஆரோக்கியத்தை எதிர்மறையாக பாதித்துள்ளன.சமூகத் தனிமை, தொழிலின்மை , பொருளாதார இழப்புகள், சிறுவர்கள் ஏனைய குடும்ப உறுப்பினர்களை பராமரிக்கும் போது வீட்டிலிருந்து வேலை செய்வது போன்ற தனியாட்கள் எதிர்கொள்ளும் ஏனைய அழுத்தங்களை உலகெங்கிலும் உள்ள ஆய்வுகள் ஆராய்ந்துள்ளன .

சுகாதாரப் பணியாளர்களிடையே தனிப்பட்ட பாதுகாப்பு ,உபகரணங்களின் பற்றாக்குறை, வைரஸ் பாதிப்பு,நோயாளிகளைக் காப்பாற்றுவதற்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் பயனளிக்காமல் போவது , நோயாளர்கள் மட்டும்புத்தூர்ப்பட்ட வளங்களைப் பெறுவது போன்ற விடயங்கள் ஆய்வுகளில் அடங்கும். ஒரு சில ஆய்வுகள் மன உளைச்சலுக்கான அறிகுறிகள், கவலை, மனச்சோர்வு போன்ற தொற்றுநோய்களின் போதான பொது மக்களின் தன்மையை ஆய்வு செய்துள்ளன.சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கு உளநல ஆலோசனை வழங்குவது குறித்து பரிந்துரைக்கப்படுகிறது. தொழிலாளர்கள் போதுமான ஓய்வு மற்றும் இடைவெளிகளைக் கொண்டிருக்க வேண்டும். மேலாளர்கள் சமூகத்துடன் வழக்கமான தகவல் மற்றும் கருத்து பரிமாறல்களுடன் இருக்க வேண்டும். தொழில்முறை நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களுக்கு உடல் சோர்வை பரிசோதித்தல், சீர்செய்தல், குழுப்பப் பிரச்சினைகள் மற்றும் மனநல பிரச்சினைகளை சமாளிக்க இலவச, அமர்வுகளை வழங்க உளவியல் உதவி மற்றும் ஆரோக்கிய திட்டத்தை வழங்க வேண்டும் .தற்போதைய சர்வதேச தொற்றுநோய்கள் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தொற்றுநோய்கள் எமக்கு சவாலாக இருக்கக்கூடும் .அதனால் ஏனைய நாடுகளுடன் தொடர்ந்து விடயங்களை அறிந்துகொள்ளவும் பகிர்ந்துகொள்ளவும் கிடைக்கக்கூடிய வாய்ப்பு எம்மை துருவமயப்படுத்துவதற்கு பதிலாக அதிகளவுக்கு ஒத்துழைப்புடன் இணைக்கும்.

தொற்றுநோயில் பிரிவின் தகவலின் பிரகாரம் இலங்கையில் கொவிட் -19 மரணங்களில் 76.2 சதமானவை 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் இறப்புகளாகும். 22.5 சத இறப்புகள் 30 முதல் 59 வயதுக்குட்பட்டவர்கள், 1.3 சத மரணங்கள் 30 வயதுக்கு குறைவான வர்களாவர் .கொரோனா மரணங்களில் 9,067 ஆண்களும் 7,019 பெண்களும் உள்ளடங்குவர். உண்மையில் நோய்களை எதிர்த்துப் போராட எமது உடலுக்கு நாம் எப்படி உதவுவது என்று எவரும் யோசிக்கக்கூடும். எமது உடலுக்குள் ஊடுருவி வரும் நோய்க் கிருமிகளை எமது உடலே தானாகவே எதிர்த்துப் போராடி அவற்றை நீக்குகிறது. இது எல்லா நேரத்திலும் நடக்காது. சில சமயங்களில் உடல் எந்த ஒரு வெளிமட்டத் துகளையும் அடையாளம் காணத் தவறிவிடுகிறது. அத்தகையதொரு சந்தர்ப்பத்தில் அவை உடலுக்குள் வெற்றிகரமாகப் படையெடுத்து எம்மை நோய்வாய்ப்படுத்துகிறது. உணவு மற்றும் வாழ்க்கை முறையில் மாற்றங்களை பின்பற்றுவதன் மூலம், உன்நாட்டில் இந்த செயற்பாட்டில் தலையிட்டு எமது நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க வேண்டும். அத்துடன் உயிரிழப்புகள், பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வருவதனால் சமூக இடைவெளியை பேணுதல், முகக்கவசங்களை அணிதல் போன்றவற்றையும் தொடர்ந்து இறுக்கமாக கடைப்பிடிக்க வேண்டும்.

பெரும் நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கையின் அரசியல் பொருளாதாரம் குறித்து அகிலன் கதிர்காமருடன் ஹிமால் சவுத் ஏசியனின் நேர்காணல்

HIMAL SOUTHASIAN

கடந்த பல மாதங்களாக, இலங்கையில் நீடிர மடைந்துவரும் பொருளாதார நெருக்கடி பற்றிய செய்திகள் பிராந்திய மற்றும் உலகளாவிய ஊடகங்களில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன. ஆயினும் கூட, நாட்டின் பாரிய வெளிநாட்டு-கடன் கமை, அந்நியச் செலாவணி இருப்புகள் குறைவடைதல், அதன் சக்தி தேவைகளைப் பூர்த்தி செய்வதில் உள்ள சவால்களென நெருக்கடிக்கான அறிகுறிகளில் பெரும்பாலான உள்ளடக்க விடயங்கள் ஒன்றுபடுகின்றன. எவ்வாறாயினும், நாட்டின் அரசியல் பொருளாதாரத்தின் நீண்டகால அம்சங்கள் மற்றும் தற்போதைய நிரமங்களுடனான அதன் தொடர்பு பற்றிய கேள்விகள் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. கடந்த தசாப்தங்களின் கொள்கை நியான நீர்மானங்கள் தொற்றுநோய்க்குப் பின்னர் காணப்பட்டதைப் போன்று இலங்கை பொருளாதாரத்தை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ அதிர்ச்சிக்குள்ளாக்கியதா? நிபுணர்கள் மற்றும் கருத்து ருவாக்குபவர்கள் பொருளாதாரம் பற்றி பொதுவெளியில் எப்படி விவாதிக்கிறார்கள்? தற்போதைய அரசாங்கத்தின் யதார்த்தமான தெரிவுகள் என்ன?

அரசியல்பொருளாதார நிபுணரும் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் கௌரவத் தலைவருமான யாழ்.பல்கலைக்கழக கிரேஷ்ட விரிவுரையாளருமான அகிலன் கதிர்காமருடன் ஹிமால் சவுத் ஏசியன் கலந்துரையாடிய ிவ கேள்விகள் இவை. கதிர்காமர் இலங்கையின் பொருளாதாரத்தின் பாதை மற்றும் அதன் கட்டமைப்பு அம்சங்களை மட்டுமன்றி , தற்போதைய நெருக்கடிகள் பற்றிய விரிவான பார்வையை வழங்குகிறார்.ஆனால் விவாதத்தின் தற்போதைய கட்டமைப்பில் உள்ள பிரச்சினைகளையும் விவரிக்கிறார்.

ஹிமால் சவுத் ஏசியன்: இன்று இலங்கை எதிர்நோக்கும் பொருளாதார சவால்களை நீங்கள் எவ்வாறு வகைப்படுத்துவீர்கள்? மேலும் நாட்டின் அரசியல் பொருளாதாரத்தில் நிகழ்காலத்தை புரிந்துகொள்ள எமக்கு உதவக்கூடிய நீண்டகாலப் போக்குகள் உள்ளனவா?

அகிலன் கதிர்காமர்: இது 1948 இல் கதந்திரம் பெற்ற பின்னர் இலங்கை எதிர்கொண்ட மிக அழிவுகரமான நெருக்கடியாகும். இவங்கையின் தற்போதைய சூழ்நிலையானது 1930 களில் பெரும் பொருளாதார நெருக்கடி நிலையால் மட்டுமல்லாமல் மலேரியா நெருக்கடியாலும் பெரும் துன்பத்துக்கு ஒட்டுச் சென்ற தைப் போன்றது. கொவிட் -19 தொற்றுநோய் மருத்துவ அவசரநிலை மற்றும் கலிமானவு பொருளாதாரச் சீர்குலைவு ஆகிய இரண்டிற்கும் வழிவகுத்துள்ள அதேவேளை, இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியானது தொற்றுநோயை விட மிகவும் பரந்ததாகவும் நீண்டதாகவும் உள்ளது.

1970 களின் பிற்பகுதியில் தாராள மயமாக்கலுக்குப் பிறகு இவங்கை பொருளாதாரம் நெருக்கடிக்கு ஆளானது. தெற்காசியாவில் கட்டமைப்பு ரீதியான ரீப்படுத்தலுக்குட்பட்டு புதிய தாராளவாதப் பாதையை வடிவமைத்த முதல் நாடு இதுவாகும். ஜே.ஆர். ஜெயவர்தன அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட அந்த பொருளாதார மாற்றங்கள், உள் நாட்டில் 'கிறந்த பொருளாதார ரீதிருத்தங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. அவை சிறுபான்மையினரை ஒடுக்குவதற்கு மட்டுமல்லாமல், தொழிற்சங்கங்கள் மற்றும் இடதுசாரிகள் மீதான தாக்குதல்களுக்கும் பயன்படுத்தப்பட்ட சர்வாதிகார சக்தியால் முன்தள்ளப்பட்டன. ஜெயவர்தன அரசாங்கம் 1979 இல் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை எவ்வாறு இயற்றியது மற்றும் தமிழ் சிறுபான்மையினருக்கு எதிரான படுகொலைகளுக்கு உடந்தையாக இருந்தது என்பதை நாம் நினைவுகூரும்போது, 1980 ஜூலையில் தொழிற்சங்கங்கள் ஆட்சியால் நசுக்கப்பட்டதை நாம் மறந்துவிடுகிறோம். பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில் இருந்து தூக்கி எறியப்பட்டனர். தொழிலாளர்களை ஒழுங்கமைக்க கிறிதளவும் இடமில்லாத கதந்திர வர்த்தக வலயங்கள் நிறுவப்பட்டதுடன், தொழிலாளர் இயக்கம் இன்று வரை மீண்டெழவில்லை.

1970 களின் பிற்பகுதியில் பொருளாதாரம் நிறுக்கப்பட்டதில் இருந்து தொடங்கிய பொருளாதார ரீதியான பிறப்பான சூழ்நிலை மேற்குலக மூலதனத்தின் வரவால் உந்தப்பட்டு, 1982 இல் ரீகுலேயஸ் தொடங்கியது. 1983 ஜூலையில் நடந்த கொடூரமான இனக்கலவரம், பொருளாதார வீழ்ச்சியிலிருந்து கலனத்தைத் நிலைநிருப்புவதற்கான ஜெயவர்தன ஆட்சியின் முயற்சியாகும். உள்நாட்டுப் போரின் தொடக்கத்துடன், அரசின் முன்னுரிமைகள் போர்க்காலப் பொருளாதாரத்தை நிர்வகிப்பதற்கு மாறியதால், நவதாராளவாதக் கொள்கைகளை முழுஅளவில் தொடர முடியவில்லை. இந்தச் சூழலில், 26 ஆண்டுகாலம் நீடித்த போரின் இருண்ட ஆண்டுகளில், சரி வதே மூலதனம் இலங்கை மீதான ஆர்வத்தை இழந்தது. 2009 இன் பிற்பகுதியில், ராஜபக்ஷ ஆட்சியால் இணைக்கப்பட்ட போரின் பேரழிவு மற்றும் எதேச்சாதிகார ஸ்திரத்தன்மையுடன், ஊகத்தை அடிப்படையாகக் கொண்ட நோக்கங்களை பார்த்த போதிலும் சர்வதே மூலதனத்தின் கணிசமான வரவைக் கண்டிருந்தது. 2008 ஆம் ஆண்டின் பெரும் நிதி நெருக்கடிக்குப் பின்னர் வளர்ந்து வரும் சந்தேகநபர்களுக்கு அபரிமிதமான மூலதனப் பாய்ச்சலால் அந்த இயக்கவியல் வலுவூட்டப்பட்டது. இவங்கை வளர்ந்துவரும் சந்தையாகவும் மோதலுக்குப் பின்னரான பொருளாதாரமாகவும் கருதப்பட்டது. மேலும் கொழும்புப் பங்குச் சந்தையின் மதிப்பு போருக்குப் பின்னர் 18 மாதங்களில் நான்கு மடங்காக அதிகரித்தது.

ஒரு தசாப்தத்திற்கு முன்னர், இந்த அரசியல்-பொருளாதார மாற்றங்களை ஒரு எதேச்சாதிகார ஆட்சியுடனும் அவர்களின் சந்தை சார்பு கொள்கைகளுடனும் இவங்கையில் நவதாராளவாதத்தின் இரண்டாவது அலையாக நான் வகைப்படுத்தினேன். பெருகிவரும் நிதியமயமாக்கலின் இரண்டாவது அலை தான் இலங்கையை தற்போதைய நெருக்கடிக்குள் ஆழமாகத் தள்ளியுள்ளது. இருப்பினும் தொற்றுநோயின் இடையூறுகளால் செங்குத்தான பாறைமின் மேல் தள்ளப்பட்டது.

ஹிமால் சவுத் ஏசியன்: பொருளாதார நெருக்கடி குறித்த பொதுவான உரையாடல்களில் விவசாயக் கொள்கைகள் மற்றும் வர்த்தக விதிமுறைகள், பணவியல் கொள்கை மற்றும் வெளிநாட்டுக் கடன் வரை பலவிதமான விடயங்கள் உள்ளடங்குவதாகத் தெரிகிறது. பொருளாதார வீழ்ச்சியின் ில அறிகுறிகளை அவற்றிற்கான காரணங்களிலிருந்து வேறுபடுத்த முடியுமா?

அகிலன் கதிர்காமர்: கடந்த ில தசாப்தங்களாக பொருளாதாரக் கொள்கைப் பொறிகள் ஏறக்குறைய சகல துறையையும் பாதித்துள்ளன. பொருளாதாரத்தின் பல்வேறு அம்சங்களைப் பாதிக்கும் பல்வேறு பிரச்சினைகள் காலப்போக்கில் உருவாகியுள்ளன. உதாரணமாக, தாராளமயமாக்கலுக்குப் பிறகு விவசாயக் கொள்கைகளை எடுத்துக்கொண்டால், விவசாயத்தில் அரச முதலீடுகளில் உலக சம்பந்தமான சரிவு ஏற்பட்டுள்ளது. மேலும், இந்தக் கொள்கைகள் விவசாய உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தைக் குறைத்து, விவசாயத்தில் தாராளமயமாக்கப்பட்ட வர்த்தகம், விவசாயப் பொருட்களின் இறக்குமதியை அதிகரித்தது. இவங்கையின் பரும்படி பொருளாதாரக் கொள்கைகள், உட்கட்டமைப்பு மேம்பாடு, கதிறுவாவுக்கான ரியல் எஸ்டேட் முதலீடு ஆகியவற்றை வெளிநாட்டு மூலதனத்தின் ஆதரவுடன் முன்னோக்கி எடுத்துச் செல்ல முயல்கின்றன. ஆனால் ிறிய அளவிலான விவசாயம் மற்றும் உணவில் தன்னிறைவு ஆகியவற்றைப் பாதிக்கின்றன. எனவே, விவசாயம் போன்ற ஒவ்வொரு துறையையும் நாம் தனித்தனியாகப் பார்க்க வேண்டும். ஆனால் அந்த தத் துறைகளில் ஏற்படும் மாற்றங்கள் நவதாராளவாத பொருளாதாரக் கொள்கை தொகுப்புகளின் விளைவு என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

ஹிமால் சவுத் ஏசியன்: ஏற்கனவே ஓரளவு பலவீனமான இலங்கையின் பொருளாதார நிலை, கொவிட்-19 தொற்றுநோயால் கணிசமாக பலவீனமடைந்துள்ளது என் பதில் பொதுவான ஒருமித்த கருத்து உள்ளது. தொற்றுநோய்க்கு பதிலளிக்கும் வகையில் தற்போதைய அரசாங்கம் என்ன மாதிரியான பாரிய பொருளாதார மற்றும் கொள்கை தொடர்பான நிலைப்பாடுகளை எடுத்தது? அந்த பதில்களைப் பற்றிய உங்கள் மதிப்பீடு என்ன?

அகிலன் கதிர்காமர்: பொருளாதாரத்தில் கொவிட் -19 தொற்றுநோயின் அழுத்தங்கள் வெளிப்படையாகத் தெரிந்த பிறகும் அரசாங்கம் பெறுமதியான காலத்தை வீணடித்தது. தொற்றுநோயாலும் பொருளாதார நெருக்கடியாலும் ஆழம்பதில் எதுவும் மாறவில்லை என்பது போல் அவர்கள் 2019 தேர்தல் அறிக்கையான 'கபிட்சம் மற்றும் ிறப்பான காட்சி' திரும்பத் திரும்பச் சொன்னார்கள். நிறைவேறிய அதிகார ஜனாதிபதியின் மீழ் எதேச்சாதிகார அதிகாரத்தை மையப்படுத்திய 20 ஆவது திருத்தம் மற்றும் மீட்கப்பட்ட நிலத்தில் நிதி நகரமான துறைமுக நகர சட்டமும் போன்ற வற்றைப் போன்றே, அதிகாரத்தை ஒருங்கிணைப்பதிலும் நிதியாக்கத்தின் மூலம் எளிதான நீர்வாகக் கருதியதைச் செயற்படுத்துவதிலும் மட்டுமே அவர்கள் ஆர்வமாக இருந்ததால் இது அவர்களின் மிகப்பெரிய தவறாகும். உயர்கல்வியை இராணுவமயமாக்குவதற்கும் தனியார்மயமாக்குவதற்கும் அவர்கள் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகம் சட்டமூலத்தை முன்வைக்க முயற்சித்த தருணத்தில், சமூகத்தின் பல்வேறு பிரிவுகளில் இருந்து எதிர்ப்பு பெருகத் தொடங்கியது. 2021 இன் பிற்பகுதியில், அடுத்த ஆண்டுக்கான பட்ஜெட்டை அவர்கள் அறிவித்தபோதுதான், நாடு நெருக்கடியில் இருப்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

எவ்வாறாயினும், மக்கள் நெருக்கடியை உணர்ந்து, விவசாயத்தை நோக்கி திரும்புவது உட்பட தங்கள் பொருளாதார நிலைமையை உறுதிப்படுத்த ஏனைய வழிகளைத் தேடத் தொடங்கினர். ஆனால் 2021 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கான நிலை தடையினால் அது குறைமதிப்பிற்குட்பட்டது. தொற்றுநோய் மற்றும் முடக்கங்களுடன், உழைக்கும் மக்கள், குறிப்பாக அன்றாடம் ஊதியம் பெறும் குடும்பங்கள், குறைந்து வருகின்ற வருமான வழிகளால் பேரழிவிற்கு உட்பட்டுள்ளனர். மேலும் இவங்கையில் மக்களுக்கு நிவாரணம் கிடைத்துள்ளது. ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது கூட மிகக் குறைவாக இருந்தது.

ஹிமால் சவுத் ஏசியன்: பொருளாதார நிபுணர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பொதுத் துறையில் கருத்து ருவாக்குபவர்கள் எவ்வாறு இந்த நெருக்கடியைப் பற்றி விவாதித்தார்கள்? நாட்டிற்குள் இருக்கும் அரசியல் அல்லது சித்தாந்தப் பிளவுகளின் மீதும் வெ ிந்தனைகளின் வழியே துருவமயமாக்கல் ஏற்படுவதை நாம் காண்கிறோமா? மேலும் லெகாட்கெள் ஏனையவர்களை விட அதிக வெளிப்பாட்டை பெறுகின்றன என்று நினைக்கிறீர்களா?

அகிலன் கதிர்காமர்: பொருளாதாரம் பற்றி மிகக் குறைந்தளவிலான விவாதங்களே உள்ளன. சர்வதேச நாணய நிதியத்துடன் உன்படிக்கைக்கு செல்லப் போவ தில்லை என்று அரசாங்கம் பகிரங்கமாக கூறிக்கொண்டிருக்கும் அதே வேளையில், அவர்கள் உண்மையில் நாணய நிதியதை அணுகுவதற்கான வழிகளை ஆராய்ந்து வருகின்றனர். எதிர்க்கட்சிகள், குறிப்பாக ஐக்கியமக்கள் சக்தி, நாணய நிதியத்தை நிந்திரக்கவசம் என்று நம்புகின்றது. பெரும்பாலான அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊழலை ஊக்கிக்கக்கூடிய ஆய்வாளர்கள் கூட ஏதோ ஒருவகையில் நாணய நிதியத்தையும் எப்படியாவது இதுவும் ீனா மற்றும் இந்தியாவின் ஆதரவு இலங்கையின் கடுமையான நெருக்கடியை தீர்க்க முடியும் என்று நம்புகிறார்கள். எவ்வாறாயினும், இந்த நெருக்கடியின் அளவைக் கருத்தில் கொண்டு நான் அதை 1930 களின் பெரும் மந்தநிலையுடன் ஒப்பிடுவேன், எமது கடந்தகால கொள்கைகளில் இருந்து தீவிரமான விலகல் இருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை. இலங்கை பொருளாதார நிபுணர்கள், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஏனைய சர்வதேச நிறுவனங்களினால் முன்வைக்கப்பட்ட கொள்கைப் பரிந்துரைகளை மறுசீரமைத்து, சோம்பேறிகளாக மாறி, இந்த வரவாறு ரீதியான நெருக்கடியான சவாலை எதிர்கொள்ளும் ஆற்றலை இழந்துள்ளன.நாணயநிதியம் 2 பில்லியன் டொலர் அல்லது அதிகபட்சம் 3 பில்லியன் டொ லர் என்றளவில் மட்டுமே வசியை வழங்க முடியும். ஆனால் 2021 இல் வர்த்தக நிலுவை 8.1 பில்லியன் டொலராக இருந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் உன் படிக்கைக்கு அழுத்தம் கொடுப்பவர்கள், இலங்கையை சர்வதேச மூலதனச் சந்தைகளில் இருந்து மீண்டும் கடன் வாங்குவதற்கு,

07 ஆம் பக்கம் பார்க்க ...